தினமலர்
சென்னை | வெள்ளி | 13.3.2020

# மாவட்ட டிவிஷன் வாலிபால் லீக் வருமான வரித் துறை அணி வெற்றி

**சென்னை, மார்ச் 13–**

சென்னை மாவட்ட அளவிலான, 'ஏ' டிவிஷன், 'லீக்' வாலிபால் சாம்பியன்ஷிப் போட்டியில், வருமான வரித் துறை அணி வெற்றி பெற்றது.

சென்னை மாவட்ட அளவிலான, 'ஏ' டிவிஷன் 'லீக்' வாலிபால் சாம்பியன்ஷிப் போட்டி, எழும்பூர், மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி அரங்கில் நடக்கிறது.

இதில், ஆண்கள் பிரிவில் நடக்கும் போட்டியில், ஐ.ஓ.பி., எஸ்.ஆர்.எம்., பல்கலை, வருமான வரித் துறை கஸ்டம்ஸ் உள்ளிட்ட பல்வேறு அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றன.

நேற்று முன்தினம் நடந்த, 'லீக்' போட்டியில், வருமான வரித் துறை மற்றும் சேப்பாக்கம் பிரண்ட்ஸ் அணிகள் மோதின.



■ வீரர்கள் உற்சாகமாக விளையாடினர்.

இந்த போட்டியில், 3 – 1 என்ற செட் கணக்கில், வருமான வரித் துறை அணி வெற்றி பெற்றது.

அடுத்த போட்டியில், கஸ்டம்ஸ் அணி, 3–1 என்ற செட் கணக்கில், செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரி அணியை வீழ்த்தி வெற்றி வென்றது.

நேற்று நடந்த, 'லீக்' போட்டியில், கஸ்டம்ஸ் மற்றும் எஸ்.ஆர்.எம்., பல்கலை அணிகள் மோதின. இதில், 3 – 0 என்ற செட் கணக்கில், கஸ்டம்ஸ் அணி வெற்றி பெற்றது.

140320